ஏரிகள் - குளங்கள் மற்றும் கண்மாய்களில்

களிமண் - வண்டல் மணலை விவசாயிகள் கட்டணமின்றி எடுத்துச் செல்லலாம்!

சட்டப்பேரவையில் அவை முன்னவர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 30- அவை முன்னவரும், நீர் வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (28.6.2024) சட்ட மன்றப் பேரவையில் ஏரிகள், குளங்கள் மற்றும் கண்மாய்களில் உள்ள களிமண் மற்றும் வண்டல் மண் ஆகியவற்றை கட்டணமின்றி விவசாயப் பெருமக்கள் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் எடுத்து செல்லும் முறையை எளிமையாக்குதல் குறித்து பேசியதாவது:-

விவசாயப் பெருமக்கள் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், நீர்வளத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகள், குளங்கள் மற்றும் கண்மாய்களில் உள்ள களிமண் மற்றும் வண்டல் மண் ஆகியவற்றை கட்டணமின்றி எடுத்துச் செல்ல ஏற்கெனவே ஜூன்12 அன்று முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

இந்நிலையில், இதற்கு அனுமதி வழங்கும் முறையை எளிமைப்படுத்தும் வகையில், வட்டாட்சியருக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அதோடு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் இப்பணியினை ஒருங்கிணைந்து திறம்பட செய்திட இயற்கை வளங்கள் துறையால் கடந்த 25.6.2024 அன்று நிலையான வழிகாட்டு நெறிமுறைகளும் அறிவிக்கப்பட்டு, இதற்கென பிரத்யேக இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டு உள்ளது.

இன்று வரை நீர்வளத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள 5,103 ஏரிகள், குளங்கள், கண்மாய்கள்; ஊரக வளர்ச்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ள 6,757 ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் பற்றிய விவரங்கள் மாவட்ட அரசிதழ்களில் வெளியிடப்பட்டு, தற்போது இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

ஏற்கெனவே விவசாயிகள் தாங்கள் வசிக்கும் கிராமங்களில் அல்லது அருகில் உள்ள கிராமங்களில் உள்ள ஏரிகள் மற்றும் குளங்களில் உள்ள மண்ணை எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலையை மாற்றி, தற்போது விவசாயிகள் தாங்கள் வசிக்கும் தாலுகாவில் உள்ள ஏரிகள் மற்றும் குளங்களில் வண்டல் மண் எடுத்துக் கொள்ளலாம்.

மேலும், இடைத்தரகர்கள் இல்லாமல், நேரடியாக விவசாயிகள் தாங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள இசேவை மையத்தில் விண்ணப்பித்து, எவ்விதக் கட்டணமுமின்றி, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மண் எடுக்கும் உத்தரவுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் பயனாக, ஏரிகள், குளங்கள் மற்றும் கண்மாய்கள் தூர்வாரப்படுவதால், மழைக் காலங்களில் பெறப்படும் நீர் கூடுதலாக சேமிக்கப்பட்டு, நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, அப்பகுதி வாழ் பொதுமக்களும் பெரிதும் பயன்பெறுவார்கள்.

எனவே, விவசாயப் பெருமக்கள் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் இந்த நல்வாய்ப்பினைப் பயன்படுத்தி, இணைய தளம் மூலம் வரும் 3-7-2024 முதல் விண்ணப்பித்துப் பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் கூறினார்.

தேனாம்பேட்டை பாலியல் வழக்கு:

நான்கு பேர் குண்டர் சட்டத்தில் அடைப்பு!

சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்!

சென்னை, ஜூன் 30

சட்டப்பேரவையில் காவல் துறை மானியக் கோரிக்கையில் மார்க்சிஸ்ட் உறுப்பினர் சின்னதுரை பேசுகையில், சென்னை தேனாம்பேட்டை பகுதியில் ஒரு கும்பல் மூன்று ஆண்டுகளாக ஏழையெளிய பள்ளி மாணவிகளை பாலியல் வணிகத்திலே ஈடுபடுத்திய சம்பவத்தில் எத்தனை மாணவிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரியவில்லை.

எனவே இச்சம்பவம் குறித்து விசாரிக்க CBCID விசாரணைக்கு உத்தரவிட்டு, விசாரித்து மூன்று மாத கால அவகாசத்திலே குற்றவாளிகள் அனைவரையும் கைது செய்திட வேண்டுமென பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்.

அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உறுப்பினர் சின்னதுரை அவர்கள் முன் வைத்த கோரிக்கையை பொறுத்தவரை, தேனாம்பேட்டை பாலியல் வழக்கில் அனைத்து குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அதில் தொடர்புடைய நான்கு பேர் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டுவிட்டார்கள். புலன் விசாரணையில் வேறு மாநிலங்களில் விசாரணை நடத்த வேண்டுமென்ற சூழ்நிலை எழுந்ததால் CBCID க்கு மாற்ற வேண்டுமென்ற உறுப்பினர் கோரிக்கை நிச்சயம் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தார்.

மும்பையில் இன்று நடைபெறுகிறது!

கலைஞர் நூற்றாண்டு விழாப் படைப்பாளர்களுக்கு பாராட்டு விழா!

பாராட்டுரை: அலிசேக் மீரான் - தலைமை: ஜேம்ஸ் தேவதாசன்!

மும்பை, ஜூன் 30 -

மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றம் நடத்தும் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம் (30.06.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணிக்கு தொடங்கி இரவு 8 மணி வரை) முலுண்ட் மேற்கு முலுண்ட் காலனியில் வைத்து நடைபெறுகிறது.

திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழக ஒருங்கிணைப்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நூறு தலைப்புகளில் எழுதப்பட்ட நூறு படைப்பாளர்களின் நூல்கள் தமிழ் நாடு முதல்வர் தளபதி தலைமையில் சென்னையில் நடைபெற்றது. நூல்களை வெளியிட்ட முதல்வர் படைப்பாளர்களுக்கு "கலைஞர் தமிழ் ஆய்வறிஞர் விருது" வழங்கிச் சிறப்பித்தார்.

நூறு படைப்பாளர்களில் ஆறு பேர் மராத்திய மாநிலத்தில் இருந்து செயல்பட்டு வரும் இலக்கிய அமைப்பான மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பித்தக்கது. எனவே, மன்றப் படைப்பாளர்களைப் பெருமைப் படுத்தும் விதமாக அவர்கள் எழுதிய ஆறு நூல்களை யும் அறிமுகப் படுத்திப் பாராட்டும் நிகழ்வு நடைபெற உள்ளது.

மன்றப் படைபாளர்களுக்கு பாராட்டு விழா:

பாராட்டு விழா நிகழ்விற்கு மன்றப் புரவலரும் பம்பாய் திருவள்ளுவர் மன்ற பொதுச்செயலாளருமான ஜேம்ஸ் தேவதாசன் தலைமை தாங்க, மன்றப் புரவலரும் அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினருமான அலிசேக் மீரான் நூல்களை வெளியிட்டு, அறிமுகப்படுத்திப் பாராட்டுரை நிகழ்த்துகிறார்.

இந்த நிகழ்ச்சியில் பி.கிருஷ்ணன், பெ.கணேசன், அ.இளங்கோ, ந.வசந்தகுமார், வே.ம.உத்தமன், அ.இரவிச்சந்திரன், என்.விசண்முகராசன், , வெ.அஜைனுல்லாபுதீன், எஸ்.பி செழியன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்த நிகழ்வையும் இதைத்தொடர்ந்து மன்றம் நடத்தும் ஏனைய நிகழ்வுகளையும் தமிழ் எழுத்தாளர் மன்ற முன்னணி பேச்சாளர்கள் செந்தமிழ் கதிரொளி சுந்தரி வெங்கட், நற்றமிழ் நாவலர் செல்வி ராஜ் மற்றும் கலைப்பிரிவு துணை ஒருங்கிணைப்பாளர் இசையமுது வாணிஸ்ரீ வேணுகோபால் ஆகியோர் நெறியாள்கை செய்கின்றனர்.

மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றத் தலைவர் பாவரசு வதிலை பிரதாபன் எழுதிய 'கலைஞர் அந்தாதி' என்ற நூலை மும்பைத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் இலக்கியச் செல்வர் வெ.பாலு பெற்றுக் கொள்கிறார்.

தமிழ் எழுத்தாளர் மன்ற ஆலோசகர் பாவரசு முகவை திருநாதன் எழுதிய 'கலைஞரின் கவிதைகளில் பகுத்தறிவு' என்ற நூலை மும்பைத் தமிழ்ச் சங்கத் தலைவர் எஸ்.இராமதாஸ் பெற்றுக் கொள்கிறார்.

தமிழ் எழுத்தாளர் மன்ற சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் க.கணேசன் எழுதிய 'கலைஞரின் குறளோவியம்' நூலை தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் மேனாள் ஆலோசகர் கருவூர் இரா பழனிச்சாமி பெற்றுக் கொள்கிறார்.

தமிழ் எழுத்தாளர் மன்ற முன்னணிப் பேச்சாளர் நற்றமிழ் நாவரசி பிரவினா சேகர் எழுதிய 'கலைஞரின் பொன்னர் சங்கர்' என்ற நூலை தொழிலதிபரும், சமூக சேவகருமான கே.வி அசோக்குமார் பெற்றுக் கொள்கிறார்.

சென்னை வேல்ஸ் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் ச.பிரியா எழுதிய 'கலைஞரின் சங்கத் தமிழ் மரபும், மாண்பும்' என்ற நூலை டோம்பிவலி தென்னிந்திய கல்விக் கழகக் கல்வியாளர் டி.என் முத்துகிருஷ்ணன் பெற்றுக் கொள்கிறார்.

தஞ்சாவூர் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் சு.பாஸ்கர் எழுதிய 'கலைஞரும் கவின்மிகு தமிழும்' என்ற நூலை சமூக ஆர்வலர் அ.பாலசுப்பிரமணியன் பெற்றுக் கொள்கிறார்.

ந.கனகசபை, டாக்டர் ஜி.வி பரமசிவம், ஞான அய்யாபிள்ளை, கவிஞர் பாண்டித்துரை, தமிழ் அறம் இராமர், அப்துல் லத்தீப், அஞ்சாமை அறச்செல்வன் கதிரொளி, ஆரோக்கிய செல்வி, கலைச்செல்வி, அருணாச்சலம், வீரை சோ.பாபு, பாலா ரவி, பால முருகன், பாலன், ராஜ மாணிக்கம், பாவலர் நெல்லை பைந்தமிழ், பேராசிரியர் பத்மாவதி சீனிவாசன், கவிஞர் விஜி வெங்கட் ஹைதராபாத், கனக மணிகண்டன், கவிஞர் கனிஷ்டா ரூபன், காரை ரவீந்திரன், கதிரவன் மும்பை, காசிநாதன் புதுக்கோட்டை, அ.கதிர்வேல், கோ.சீனிவாசகம், திலகராணி திருச்சி, முத்தப்பா, பா.கலையரசி, கே.ஆர்.சீனிவாசன், டாக்டர் சி.மார்கண்டன், டாக்டர் தே.தேன்மொழி, டாக்டர் சே.பத்மினி பாலா, டாக்டர் யு.துர்காதேவி, டாக்டர் ரேணுகா,

வழக்கறிஞர் ராஜஸ்ரீ நாகராசன், டாக்டர் ச.பிரியா, டாக்டர் ஸ்ரீலதா, டாக்டர் பன்னிருகை வடிவேலன், கே.துர்காதேவி, ந.தன லட்சுமி, டாக்டர் வைத்திலிங்கம், டாக்டர் கே.நாகம்மாள், டாக்டர் நளினி, டாக்டர் நர்மதா, டாக்டர் சாந்தி, கவிஞர் பாபு சசிதரன், சரத்பாபு, ஞானம், பன்னீர்செல்வம் (கொலாபா), எல்.பாஸ்கரன் (மலாடு), மெஹபூப் பாஷா, சிவக்கொழுந்து, முருகன் (மலாடு), தா.செகுமார், வணக்கம் மும்பை ஜெயா ஆசீர், இராமானுஜம், சமீர் அசன், முத்துராஜ், சதாசிவம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்ற நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ் அன்பர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தமிழ் எழுத்தாளர் மன்றத் தலைவர் பாவரசு வதிலை பிரதாபன் கேட்டுக் கொண்டுள்ளார்.

விக்கிரவாண்டியில் - கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு

திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தினர் தீவிர வாக்கு சேகரிப்பு!

கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் இ.பெரியசாமி வழிகாட்டலில் - வீடு வீடாகச் சென்றனர்!

விக்கிரவாண்டி, ஜூன் 30-

விக்கிரவாண்டி இடைத்தேர்தல் பணியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவுப்படி திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் சோழாம்பூண்டி, சோழனூர், ஆகிய ஊராட்சிகளில் வீடு வீடாகச் சென்று தீவிர பிரச்சாரம் செய்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தனர்

திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு விக்கிரவாண்டி தொகுதிக் குட்பட்ட சோழாம்பூண்டி, சோழனூர் ஆகிய கிராம ஊராட்சி ஒதுக்கப்பட்டது. தமிழக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சரும், தி.மு.க. மாநில துணை பொதுச்செயலாளருமான ஐ.பெரியசாமி உத்தரவுப்படியும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் வழிகாட்டுதலின்படி திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் பம்பரம் போல் சுழன்று தேர்தல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாநில வர்த்தகரணி இணைச் செயலாளர் ஜெயன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அஸ்வின் பிரபாகரன், இளைஞரணி அமைப்பாளர் ம.கணேசன், திண்டுக்கல் மாநகர செயலாளரும், துணை மேயருமான ராஜப்பா, ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, ஆத்தூர் முருகேசன், மற்றும் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர்கள் செல்வம், அரவிந்தன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ், ஜான்பீட்டர், ஆனந்தன், சின்னாளபட்டி பேரூர்கழக பொருளாளர் எஸ். ஆர்.முருகன், மற்றும் இளைஞர் அணியினர், சார்பு அணியினர், வீடு வீடாகச் சென்று தமிழக முதல்வரின் சாதனை திட்டங்கள் குறித்து எடுத்து ரைத்ததோடு மறக்காமல் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களியுங்கள் எனக்கூறி தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் அப்பகுதியை சேர்ந்த தி.மு.க. நிர்வாகிகளுடன் இணைந்து வாக்காளர் பட்டியலை சரிபார்த்தல், வெளியூர் சென்றிருக்கும் வாக்காளர்கள் விபரங்கள் குறித்து கேட்டறிந்ததோடு அவர்களை அழைத்துவந்து தேர்தலில் வாக்களிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

தினசரி பிரச்சாரம் செய்யும் இடங்கள் குறித்து திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் அவர்கள் கேட்டறிந்ததோடு தி.மு.க. நிர்வாகிகளை உற்சாகப்படுத்தி தேர்தல் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து சோழாம்பூண்டி, சோழனூர் ஊராட்சிகளை சேர்ந்த தி.மு.க. நிர்வாகிகள் கூறுகையில் ஒவ்வொரு முறையும் நாங்கள் தேர்தலின் போது பணியாற்றியதை விட இம்முறை திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுடன் இணைந்து பணியாற்றுவது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. குறிப்பாக அவர்கள் வாக்காளர்கள் விபரங்களை சேகரிக்கும் பணி மற்றும் பிரச்சாரம் செய்யும் பணி எங்களுக்கு வித்தியாசமாக உள்ளது. நிச்சயம் இப்பகுதியில் முன்பு நடந்த தேர்தலை விட இம்முறை அதிக வாக்குகள் பெறுவோம் என்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

துறையூர் க. மகாராசன்
ஜூன் 30 (2014)

இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

துறையூர் நகரத்தில் மாவட்ட பிரதிநிதியாகவும், அதன் பின்னர் இருபத்தோறு ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

1986-ல் நகர்மன்றத் தலைவராகவும், 2006-ல் நகர்மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

காட்டம்பட்டி கா.கந்தசாமி
ஜூன் 30 (2018)

கழகம் தொடங்கிய நாள் முதல் உறுப்பினராகி, கழகப் பணியாற்றியவர்.

1989-ல் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மூன்று முறை காட்டம்பட்டி ஊராட்சி தலைவராகவும் - கிணத்துகடவு வட்டார நிலவள வங்கி தலைவராகவும் - கோவை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராவும் - மாநில கூட்டுறவு வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.